In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 78/2023 | Prosecution witness P.W.10 |
| Name: Kavitha | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 03.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் கோபால் நகரில் வசித்து வருகிறேன். நான் திண்டுக்கல் ஊர்க்காவல் படையில் 12 வருடங்களாக வேலைபார்த்து வருகிறேன். கடந்த 26.06.2022 ம் தேதி விருவீடு காவல் நிலையத்திற்கு டுட்டிக்கு போயிருந்தோம். திண்டுக்கல்லில் இருந்து விருவீட்டுக்கு TN-57-G-0697 என்ற ஈச்சர் வேனை சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி என்பவர் ஓட்டி வந்தார். மொத்தம் 20 பேர் போனோம். ஒவ்வொரு பாயிண்டிலும் ஆட்களை இறக்கிவிட்டுவிட்டு கடைசியாக ராஜலட்சுமி, கவிப்பிரியா, நான், குமரேசன் ஆகிய 4 பேர் மட்டும் வத்தல்பட்டிக்கு டுட்டிக்கு போய்க்கொண்டிருந்தபோது வேனில் கல் எறிந்த சத்தம் கேட்டது. பின்பக்க கண்ணாடி அதில் உடைந்து எங்களுடன் வந்த ராஜலட்சுமிக்கு இடது தோள்பட்டையில் அடிபட்டது. உடனே நாங்கள் கீழே இறங்கி பார்த்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் இருந்தார்கள். மறுபடியும் அவர்கள் கல்லைக்கொண்டு எறியவும் நாங்கள் பயந்துகொண்டு அந்த வழியாக வந்த அரசு பஸ்ஸில் ஏறி விருவீடு காவல் நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு ராஜலட்சுமி புகார் கொடுத்தார். ராஜலட்சுமியை வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

என்ன காரணத்திற்காக கல் எறியப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஈச்சர் வேன் இருசக்கர வாகனத்தில் மோதிய விவரம் எனக்கு தெரியாது. நான் போலீசார் விசாரணையில் நடகோட்டை ரோட்டில், வத்தல்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது எங்கள் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி, ஆயுதப்படை, என்பவர் அங்கு நின்றிருந்த இருசக்கர வாகனத்தில் எதிர்பாராவிதமாக மோதிவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி குடிபோதையில் வேனை ஓட்டிவந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி மீது விருவீடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் ஒரு அரை மணிநேரம் இருந்திருப்போம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் கால்மணி நேரத்தில் 108 ஆம்புலன்ஸ் வந்து 2ம் எதிரியையும் அவரது சகோதரர் பிரகாசையும் ஏற்றிச்சென்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்திலிருந்து வந்த அரசு பேருந்தில் எங்களை ஏற்றி அனுப்பிவிட்டார்கள். எங்களை எங்களுடன் வந்தவர்கள் ஏற்றிவிட்டார்கள். குமரேசன் பேருந்தை மறித்து என்னையும், ராஜலட்சுமி, கவிப்பிரியா ஆகிய மூவரையும் ஏற்றிவிட்டார். பஸ் ஏறும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சொல்லும் 3 முதல் 4.20 மணிக்குள் விருவீடு போகக்கூடிய பஸ் வசதி அங்கு இல்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு போய் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனக்கு முடியவில்லை என உட்கார்ந்துவிட்டேன். ராஜலட்சுமி மட்டும் ஆஸ்பத்திரிக்கு போனார். நாங்கள் வீட்டுக்கு போய்விட்டோம். விருவீடு காவல்நிலையத்தில் இருந்து செல்லும் போது எத்தனை மணியிருக்கும் என்றால் தெரியவில்லை. ராஜலட்சுமி ஆஸ்பத்திரிக்கு போய் சேர்ந்தாரா என்றால் மறுநாள் தெரிந்துகொண்டேன். வாகனத்தை ஓட்டி

வந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி குடிபோதையில் ஓட்டிவந்து நின்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், பழனிச்சாமியை பணிநீக்கம் செய்து விடுவார்கள் எனவும் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.03 13:42:47 +0530

Principal District Judge,
Dindigul.